**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பொன்னமராவதி**

**முன்னிலை :** திரு.C.பழனிவேல்ராஜன், எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், பொன்னமராவதி

2026 ஆண்டு ஜீலை திங்கள் 15–ம் நாள் புதன்கிழமை

வழக்கிடை விண்ணப்ப எண். 3/2025

in

OS No.124/2023

அண்ணாமலை,
த/பெ. ராமசாமி. ... மனுதாரர்/வாதி

//எதிர்//

1. சின்னகருப்பன் என்ற பொன்னுசாமி (இறப்பு)
த/பெ. ராமசாமி.
2. திருப்பதி,
த/பெ. சின்னகருப்பன்.
3. சின்னகருப்பன் என்ற சேகர்,
த/பெ.செல்லையா. ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு 23.06.2026ம் தேதி வந்ததில், மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. K.கிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் செல்வி. PL.சுந்தாயி அவர்கள் முன்னிலையாகியும், 3ம் எதிர்மனுதார்/3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. SP.முத்துக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்/வாதியின் ஆஜரின்மை மற்றும தவறுகைக்காக கடந்த 31.07.2025ம் தேதி 1ம் பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்ட மேற்படி வழக்கை 1ம் பிரதிவாதியை பொறுத்து மீண்டும் கோப்புக்கு எடுக்க உத்தரவிடக்கோரி

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

2.1 அசல் வழக்கானது 3ம் பிரதிவாதிக்கு எதிராக உரிமை விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் பிரதிவாதி இறந்து விட்டதாகவும், மேற்படி 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் தொடர்பாக விபரம் சேகரிப்பதில் காதாமதம் ஏற்பட்டவிட்டது என்றும், எனவே மேற்படி காலதாமதத்தை மன்னிக்க வேண்டியும், மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு எதிரான அபேட்மெண்ட் உத்தரவை ரத்து செய்ய வேண்டியும், 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க வேண்டியும், மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி சில குறைபாடுகள் காரணமாக 17.07.2025ம் தேதி திருப்பம் செய்யப்பட்டது என்றும், மேலும், மனுதாரருக்கு உடல் குறைவு ஏற்பட்டுவிட்டதால் வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை என்றும், மேற்படி வழக்கு 1ம் பிரதிவாதியை பொறுத்து கடந்த 31.07.2025ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், எனவே மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுத்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி கடந்த 20.06.2024ம் தேதியன்று இறந்துவிட்டார். மேலும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. இரு தரப்பு கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6. தீர்வு**

6.1) இம்மனுவானது மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 1ம் பிரதிவாதியை பொறுத்து 31.07.2025 அன்று தவறுகைக்காக தள்ளுபடி

செய்யப்பட்டதை ரத்து செய்ய உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6.2) 2, 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு ஆட்சேபணை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டடுள்ளது. மனுதாரர் தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் 1ம் பிரதிவாதி 20.06.2023ம் தேதி இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுகள் சம்மந்தமான விவரங்கள் சேகரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டதாகவும், அவற்றிக்காக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் குறைபாட்டுக்காக 17.0.7.2025 அன்று திருப்பபட்டுவிட்டதாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள் அந்த மனுக்களை Represent செய்ய இயலவில்லை என்றும், மனுதாரர் உடல் நலக்குறைவு காரணமாக வழக்கறிஞரை சந்தித்து ஏற்பாடு செய்ய இயலவில்லை என்றும், 31.07.2025 அன்று தவறுகைக்காக 1ம் பிரதிவாதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், அதனை ரத்து செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

6.3) அசல் வழக்கானது விளம்புகைக்காகவும், நிரந்தர தடையாணைக்காகவும், தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 2022ம் ஆண்டை சேர்ந்த வழக்கு ஆகும். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு வாரிசு நடவடிக்கை எடுப்பதற்காக போதிய வாய்ப்பு அளித்தும் 05.09.2024, 07.10.2024, 05.12.2024, 24.03.2025, 02.06.2025, 17.06.2025, 01.07.2025, 15.07.2025, 17.07.2025, 28.07.2025, 31.07.2025 ஆகிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் அவற்றை 1ம் வாதி முறையாக பயன்படுத்தாமலும், முறையாக வாரிசு நடவடிக்கை எடுக்காமலும், விட்டதால் 31.07.2025 அன்று 1ம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதன் பின்னிட்டு அசல் வழக்கு எழுவினாக்கள் வனையப்பட்டு விசாரணைக்கு வாய்தா ஏற்பட்ட நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட காரணங்களை பார்க்கும் பொழுது மனுதாரர் வாதிக்கு போதிய அளவு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் நேரத்தை மனுதாரர் வாதி வீணடித்துள்ளார் என்பதும் தெரிகிறது. அதே சமயத்தில் அசல் வழக்கானது தற்போது வரை நிலுவையில் இருந்து தான் வருகிறது. எனவே, அதனை கருத்தில் கொண்டு மேற்கண்ட

காரணங்களின் அடிப்படையிலும், நீதியின்பாலும் இம்மனுவை நிபந்தனையுடன் அனுமதிப்பது சிறந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, கீழ்கண்ட நிபந்தனைகளை மனுதாரர் தரப்பு நிறைவேற்றும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனை</u>**

மனுதாரர்/வாதி நிபந்தனையாக ரூ.1000/-த்தை 2, 3ம் எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகளுக்கு தலா ரூ.500/-வீதம் வரும் 23.07.2026 தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 24.07.2026.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் எழுதப்பட்டு பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜீலை திங்கள் 15ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்ட உத்தரவாகும்.

C PALANIVELRAJAN Digitally signed by C PALANIVELRAJAN Date: 2026.07.15 20:11:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் ,
பொன்னமராவதி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை</u>**
**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை</u>**

C PALANIVELRAJAN Digitally signed by C PALANIVELRAJAN Date: 2026.07.15 20:12:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் ,
பொன்னமராவதி.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
பொன்னமராவதி
I.A.No.3/2025 in
O.S.124/2023
வரைவு / சீரான உத்தரவு
உத்தரவு நாள் - 15.07.2026